JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 108/2020 Date:20.02.2024 P.W.5

| | |
|---|---|
| பெயர் | ° திரு.நெல்சன் |
| தந்தை பெயர், க/பெ | ° துரைபாண்டியன் |
| முகவரி | ° |
| கிராமம் | ° |
| மாவட்டம் | ° |
| ஜாதி | ° |
| தொழில் | ° |
| மதம் | ° |
| வயது | ° |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 20th day of February 2024.

எதிரி ஆஜரில் உள்ளார்.

**முதல் விசாரணை** -

1. நான் தற்போது நம்பர் 8/59, மாதவரம் நெடுஞ்சாலை , 2வது சந்து பெரம்பூர், சென்னையில் குடியிருந்து வருகிறேன். 05.12.2019 அன்று ஆவடி ஏஎம்எஸ் கல்லூரி அருகே ஏடிஎம்மில் திருட்டு முயற்சி நடந்ததாக அங்கே மும்பையிலிருந்து தகவல் வந்தது. அதன்பேரில் சம்பவயிடத்திற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது சிசிடிவி கேமராவில் கருப்பு பெயிண்ட் அடித்து வைத்தியிருந்தார்கள். மிஷினை உடைக்க முயற்சி செய்துயிருக்கிறார்கள். அதன்பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன்பின்பு காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு வந்தார்கள். காவல் நிலையத்தில் இருந்து வந்து பார்வை மகஜர் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் **அதசாஆ.2** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2. மேற்படி சிசிடிவி கேமராவில் உருவங்கள் தெரிந்ததா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு சென்ற போது பொது மக்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இருந்தது. ஆவணங்கள் கையெழுத்து செய்தது எல்லாம் வங்கி ஊழியர்கள் என்றால் சரிதான். போலீசார் சிசிடிவி கேமரா பதிவுகளை எடுத்து சென்றார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**- இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur

//True Copy//

Judicial Magistrate,
Ambattur